செ.வெ.எண்-24 நாள்-10.03.2021

**அரியலூர் மாவட்டம்**

**100 சதவீதம் வாக்களிப்போம் குறித்த மனித சங்கிலி பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.**

இந்திய தேர்தல் ஆணையம் வரும் **சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021** முன்னிட்டு தேர்தலில் 100 சதவீதம் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டுமென வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, 100 சதவீதம் வாக்களிப்போம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுத்தும் வகையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரம் இயக்கத்தின் சார்பில் மகளிர் சுயஉதவிக்குழுவினரை சார்ந்த 500-க்கும்மேற்பட்ட நபர்கள் கலந்துகொண்ட மனித சங்கிலி பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் இன்று (10.03.2021) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இப்பேரணியில் கலந்துகொண்ட மகளிர் சுயஉதவிக்குழுவினர் அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்போம், தவறாமல் வாக்களிப்போம், அச்சமின்றியும், எந்தவொரு தூண்டுலுக்கும் உட்படாமலும் நேர்மையாக சிந்தித்து வாக்களிப்பேன் என்பதை நினைவில் நிறுத்தும் வகையில் தங்களது கைகளில் வாக்காளர் விழிப்புணர்வு மெகந்தி வரைந்துகொண்டனர்.

மேலும், இப்பேரணியில் கலந்துகொண்ட மகளிர் அனைவரும் மரக்கன்றுகளை வழங்கியும், கலர் பலூன்களை கையில் ஏந்தியவாறும், தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை பிடித்தவாறும், தேர்தல் தொடர்பான வாசகங்களை கோஷங்களாக எழுப்பியவாறும் நகரில் பேரணியாக சென்றனர். பேருந்துநிலையத்தில் தொடங்கிய இப்பேரணியானது நகரின் முக்கிய வீதி வழியாக வளம் வந்தனர்.

இப்பேணியின்போது வாக்காளர் விழிப்புணர்வு துண்டுபிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி, விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும், நேர்மையாக வாக்களிக்க வாக்காளர்களின் உறுதிமொழியினை மகளிர்சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், திட்ட அலுவலர் (மகளிர்திட்டம்) தண்டபானி, கோட்டாட்சியர் ஏழுமலை, நகராட்சி ஆணையர் (பொ) மனோகரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் க.சரவணன், வட்டாட்சியர் ராஜமூர்த்தி மற்றும் மகளிர் சுயஉதவிக்குழுவினர், அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**